## 16.5 ஊராட்சி ஒன்றிய பொதுநிதி உபரித் தொகையிலிருந்து செய்யப்படும் பணிகளுக்கான செலவின ஒப்புதலுக்கான நிதி வரம்பினை உயர்த்துதல்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண் 85 நாள் 6.5.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 229 ஊரக வளர்ச்சி நாள் 15.10.96.
2. அரசாணை (நிலை) எண் 4, ஊரக வளர்ச்சி நாள் 3.1.97.
3. அரசாணை (நிலை) எண் 363, ஊரக வளர்ச்சி நாள் 22.12.97.
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண் 2205/98/திட்டம் 11 நாள் 27.1.98.

**ஆணை**

பார்வை இரண்டில் காணப்படும் அரசாணையில் ஊராட்சி ஒன்றிய பொது நிதி உபரியிலிருந்து மேற்கொள்ளப்படும் மூலதனம் பணிகளுக்கான ஒப்புதல் அளிப்பதற்கான நிதி வரம்பு பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ரூ. 5.00 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| 2. | ரூ. 5.00 லட்சங்களுக்கு முதல் ரூ. 10.00 லட்சங்கள் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊரக வளர்ச்சி இயக்குநர் |
| 3. | ரூ. 10.00 லட்சங்களுக்கு மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | அரசு |

2. ஊரக வளச்சி இயக்குநர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களது உபரி நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்றும் இதனால் சிறிய வேலைகள் செய்வதற்கு முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பி நிர்வாக அனுமதி வாங்குவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்றும், இதனால் ஊராட்சி ஒன்றிய உபரி பொதுநிதியில் முறையாக பயன்படுத்த இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதேபோன்று நகராட்சிகளுக்கு உள்ளதை அறிந்து, அரசு ஆணை எண் 54, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 28.2.97 ல் நகராட்சிகள் மண்டல இயக்குநர், இயக்குநர் மற்றும் அரசு தனிப்பட்ட வேலைகளுக்கு செலவு செய்ய உச்ச வரம்பினை உயர்த்தி அரசு ஆணையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். எனவே ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஆட்சியர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசு ஆகியோர் செலவினத்திற்கு ஒப்புதலளிக்கும் நிதி வரம்பினை உயர்த்துமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் கூறப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்து, ஊராட்சி ஒன்றிய பொதுநிதி உபரியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதனப்பணிகளுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஆட்சித்தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதலளிக்கககூடிய நிதி வரம்பினை கீழ்கண்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணை வெளியிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ரூ. 5.00 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊராட்சி ஒன்றியங்கள் |
| 2. | ரூ. 5.00 லட்சங்களுக்கு மேல் ரூ. 10.00 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| 3. | ரூ. 10.00 லட்சத்திற்கு மேல் ரூ. 1 கோடி வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊரக வளர்ச்சி இயக்குநர் |
| 4 | ரூ. 1 கோடிக்குமேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | அரசு |

4. மேலே பத்தி 3–ல் வரிசை எண் (1) ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு தனியான முதலீட்டு பணிகளுக்கு முறையாக செலவு செய்ய ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்கண்ட நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடைபிடிக்க வேண்டுமெனவும் அரசு ஆணையிடுகிறது.

## 16. GENERAL FUND WORKS

1. ஊராட்சி ஒன்றிய குழுக்களின் முன் அனுமதி பெற வேண்டும்.

2. 15.10.96 நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறையின் அரசாணை நிலை எண் 229 மற்றும் 22.12.97 நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறை அரசாணை எண் 363 ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் பொதுநிதியில் உள்ள உபரி நிதியில் 5 (ஐந்து) இலட்சத்தை ஒதுக்குத்தொகையாக வைத்த பின்னர் மீதமுள்ள தொகையில் 50 விழுக்காடு வரை செலவு செய்ய வேண்டியது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். ஊராட்சி ஒன்றிய தீர்மானத்தில் இது குறித்த சான்றிதழ் அடங்கியிருக்க வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் இது குறித்த ஊராட்சி ஒன்றியத்தின் நகலினை கூட்டம் நடைபெற்ற 7 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 739.எப்.எஸ்.பி.98 நாள் 20.2.98 ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்